இணைய வழி பட்டா மாறுதல் செய்யும் பணியில் அதிகளவில் தள்ளுபடி செய்யப்படுவதை தவிர்க்கும் பொருட்டு, கீழ்க்கண்ட அறிவுரைகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பொது இ-சேவை மைய அலுவலர்களுக்கும் வழங்கப்படுகிறது.

| வரிசை எண் | பொருள் | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 1. | பட்டா மாறுதல்/உட்பிரிவு மேற்கொண்டு தனிப்பட்டா வழங்க கோரும் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம், முறையாக பதிவு செய்யப்பட்ட ஆவணமா ? என்பதை ஸ்கேன் செய்யும் முன் சரிபார்க்கப்பட்டதா ? | | |
| 2. | பதிவு செய்யப்படாத ஆவணம் கணினியில் பதிவேற்றம் செய்யப்படவில்லை என உறுதி செய்யப்பட்டுள்ளதா ? | | |
| 3. | விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட ஆவணங்கள் பதிவேற்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா ?<br>(i). கிரயப்பத்திரம்/நீதிமன்ற தீர்ப்பு தீர்ப்பாணை/பட்டா மாறுதல் தொடர்பாக வருவாய் அலுவலர்கள் உத்தரவு ☐<br>(ii). மூலப்பத்திரம்/அரசு வழக்குரைஞரின் சட்டக் கருத்துரு ☐<br>iii. நாளது வரையிலான 10(1) நகல் ☐<br>(iv). வில்லங்கச்சான்று ☐<br>(v). ஆதார் அட்டை நகல் ☐<br>(vi). மனை வரைபட நகல் ☐ | | |
| 4. | (i) மனுதாரர் முழுப்புலத்திற்கும் உரிமை பெறத்தக்க ஆவணம் சமர்ப்பித்திருப்பின் அப்புலம் முழுவதற்கும் பட்டா மாறுதல் செய்யும் பொருட்டு கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ளதா ?<br>(ii) பகுதியாக உரிமை பெறத்தக்க ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட இனங்களில் அந்த ஆவணப்படி உட்பிரிவு மேற்கொண்டு தனிப்பட்டா பெற முடியும் என்ற விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதா ?<br>(iii) மனுதாரர் கூட்டுப் பட்டாவில் பெயர் சேர்க்க குறிப்பாக விருப்பம் தெரிவித்துள்ளாரா ?<br>(iv) உட்பிரிவு செய்ய வேண்டிய புலங்களாக இருந்தால் குறுவட்ட அளவருக்கும் சரியாக அனுப்பப்பட்டுள்ளதா ? | | |

| | | | |
|---|---|---|---|
| 5. | மனுதாரர் மனுவில் கோரியுள்ள உட்பிரிவு அல்லது பட்டா மாற்றம் தொடர்பாக இதற்கு முன் விண்ணப்பித்துள்ளாரா ? | | |
| 6. | விண்ணப்பதாரர் சிட்டாவில் கண்ட நபரிடமிருந்து கிரயம் பெறவில்லையெனில் மூல ஆவணங்களை நில அளவர்/கிராம நிர்வாக அலுவலர் பரிசீலனைக்காக ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதா ? | | |
| 7. | விண்ணப்பதாரரின் தொலைபேசி/அலைபேசி சரிபார்த்து பதிவு செய்யப்பட்டுள்தா ? | | |
| 8. | (i)விண்ணப்பதாரருக்கு விண்ணப்பம் பெறப்பட்டமைக்கு ஒப்புதல் சீட்டு வழங்கப்பட்டதா ?<br><br>(ii). பதிவேற்றத்திற்கான இ-சேவை கட்டணம் பெற்றுக் கொண்டமைக்கு ரசீது வழங்கப்பட்டதா ? | | |